செ.வெ.எண்: 249 நாள்: 24.3.2020

**புதுக்கோட்டைமாவட்டத்தில் முககவசங்கள் தேவைப்படுவோர் மகளிர் சுயஉதவிக்குழுக்களைஅணுகலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் முககவசங்கள் தேவைப்படுவோர் மகளிர் சுயஉதவிக்குழுக்களை அணுகலாம். இதகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை, பூங்காநகரில் செயல்படும் மணிக்குயில் மகளிர் சுய உதவிக் குழு தற்சமயம் கொரோனா பாதிப்பை தவிர்க்கும் பொருட்டு மகளிர் திட்டம் மூலமாக பயிற்சி பெற்று முகக்கவசம் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். முகக்கவசம் தயாரிக்கத் தேவைப்படும் மூலம் பொருட்களை சிவகாசியிலிருந்து வரவழைக்கின்றனர்.

நான்ஓவன் மற்றும் காட்டன் துணிகளைப் பயன்படுத்தி இரண்டுவித முகக்கவசங்களை தயாரிக்கின்றனர். நான்ஓவன் முகக்கவசம் ரூ.10ற்கும், காட்டன் முகக்கவசம் ரூ.13ற்கும் விற்பனை செய்கின்றனர். இதுவரை ஒருலட்சம் முகக்கவசங்களை உற்பத்தி செய்து புதுக்கோட்டை மருந்துகடைகளுக்கும், தூத்துக்குடி மாவட்டத்திற்கும் விற்பனை செய்துள்ளனர்.

மேலும் மணிக்குயில் சுய உதவிக் குழுவைப் போல் கீழ்கண்ட முகவரியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் முகக் கவசம் தயாரிப்புபணியில் ஈடுபட்டுள்ளனர்.

முகவசம் தேவைப்படுவோர் திருமதி.இன்பவள்ளி, மணிக்குயில் மகளிர்சுயஉதவிக் குழு, புதுக்கோட்டை, அலைபேசிஎண் 9443016317, திருமதி.கண்ணகி, அச்சுடம் அன்னைமகளிர் சுய உதவிக் குழு, புதுக்கோட்டை, அலைபேசி எண் 7339477416, திருமதி.புஷ்பா, புதுமை மகளிர் சுயஉதவிக் குழு, கோமங்களம், அலைபேசி எண் 805657927, திருமதி.சித்ரா, சரஸ்வதி மகளிர் சுயஉதவிக் குழு, டி.கீழையூர், அலைபேசிஎண் 8248128614 ஆகியோரை தொடர்புகொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்திவெளியீடு - செய்திமக்கள் தொடர்புஅலுவலகம்,புதுக்கோட்டை**